COMMISSIONER OF MUNICIPAL ADMINISTRATION
CHENNAI-600 005

**சுருக்கம்**

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 3 – பாதாள சாக்கடைத் திட்டம் – தேனி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இரண்டு நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை அமுல்படுத்த நிர்வாக அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.**

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை**

**அரசாணை (நிலை) எண். 237** **நாள் 11.12.07**

**படிக்க:**

1. நகராட்சி நிர்வாக ஆணையர் ந.க.எண்.2764 / 2004 / UGSS 1
   நாள் 30.11.2007
2. நகராட்சி நிர்வாக ஆணையர் ந.க.எண்.84571 / 2003 / UGSS 1
   நாள் 30.11.2007

**ஆணை :**

தேனி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இரண்டு நகராட்சிகளில் 2007–2008 நிதியாண்டிற்குள் பாதாள சாக்கடைத் திட்டத்தினை அமைத்திட கடந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வரவு செலவு கூட்டத்தொடரில் குறிப்பான ஒப்பிய பொறுப்பு அளித்துள்ளது. (Specific Commitment) அதனடிப்படையில் தேனி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இரண்டு நகராட்சிகளின் பாதாள சாக்கடைத் திட்டத்தினை அமுல்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் தனது கருத்துருவினை அரசிற்கு அனுப்பி வைத்துள்ளார். இதற்கு அந்தந்த நகராட்சிகளின் நகர்மன்றங்களும் ஒப்புதல் அளித்துள்ளன.

2) இத்திட்டமானது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 3–ன் கீழ் கீழ்க்கண்ட நிதி பங்கீடு, இயக்கம் மற்றும் பராமரிப்பு கட்டண விதம் ஆகியவற்றின் அடிப்படையில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை – 1

**நிதி பங்கீடு, இயக்கம் மற்றும் பராமரிப்பு**

| நகராட்சியின் பெயர் | மானியம் (ரூ. கோடியில்) | உள்ளாட்சி மற்றும் பயனாளிகளின் பங்கீடு (ரூ. கோடியில்) | த.நா.ந.வ.தி.3 யின் கடன் தொகை (ரூ. கோடியில்) | கூடுதல் மானியம் (ரூ. கோடியில்) | கட்டுமான த்தின் போது வட்டி வீதம் (ரூ. கோடியில்) | மொத்த மதிப்பீடு (ரூ. கோடியில்) | வருடாந்திர பராமரிப்பு கட்டணம் (ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|---|
| தேனி | 10.00 | 13.29 | 11.46 | — | 0.52 | 35.27 | 105.00 |
| நாகப்பட்டினம் | 10.00 | 10.74 | 8.21 | 20.00 | 0.48 | 49.43 | 120.00 |

அட்டவணை – 2

கட்டணவீதம்

| நகராட்சியின் பெயர் | சராசரி வைப்புத் தொகை | | சராசரி கட்டண வீதம் | |
|---|---|---|---|---|
| | வீட்டு உபயோகம் (ரூ) | வீட்டு உபயோக மல்லாதது (ரூ) | வீட்டு உபயோகம் (ரூ)(ஒரு மாதத்திற்கு) | வீட்டு உபயோக மல்லாதது (ரூ) |
| தேனி | 6026.00 | 25829.00 | 75.00 | 234.00 |
| நாகப்பட்டினம் | 6949.00 | 11491.00 | 109.00 | 168.00 |

3) இத்திட்டமானது தமிழ்நாடு குடிநீர் வாரியத்தால் உலகவங்கி திட்ட விதிகளின்படி செயல்படுத்தப்படும் என்றும், அதற்கு மாநில அளவிலான திட்ட ஒப்பளிப்புக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பின் அடிப்படையில் 20.11.2007 நாளைய கூட்டத் தொடரில் ஒப்புதல் அளித்துள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்து அரசின் அனுமதி வேண்டி தனது கருத்துருவினை அனுப்பி வைத்துள்ளார்.

4) நகராட்சி நிர்வாக ஆணையரது கருத்துரு மற்றும் மாநில அளவிலான ஒப்பளிப்பு குழுவின் பரிந்துரை ஆகியவற்றை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது . அதனடிப்படையின் தேனி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இரண்டு நகராட்சிகளுக்கு மேலே பத்தி 2-இல் உள்ள அட்டவணை 1 இல் உள்ள நிதிப் பங்கீடு, இயக்கம் மற்றும் பராமரிப்புத் தொகை, அட்டவணை 2ல் உள்ள கட்டணவீத அடிப்படையில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

அ) தமிழ்நாடு நகர்ப்புற உள் கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தால் ( TNUIFSL) பரிந்துரைக்கப்பட்ட நிதி பங்கீடு , இயக்கம் மற்றும் பராமரிப்பு மற்றும் கட்டணம் மற்றும் வைப்புத்தொகை ஆகியவற்றை ஏற்பது குறித்து தேவையான தீர்மானங்கள் அந்தந்த நகராட்சிகளால் நிறைவேற்றப்பட வேண்டும்.

ஆ) (பெரும்பாலான கருத்துருக்களில்) கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தொழில்நுட்ப வகைப்பாடு (Technical type) முடிவு செய்யப்படாத நிலையில் அதனை முடிவு செய்யும் போது அத்தொகை அதிகப்படுமானாலும், தொழில்நுட்ப மாறுபாட்டால் இயக்கம் மற்றும் பராமரிப்பு கட்டண விகிதத்தில் மாறுதல் ஏற்படுமானாலும், அதற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தால் மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

இ) இவ்வாறு பரிந்துரைக்கப்பட்ட திட்டத்திற்கான கடன் மானிய தொகையினை இறுதியாக்கம் செய்யும் போது கட்டணவிகிதம் மற்றும் வைப்புத்தொகை தொடர்பான வகைப்பாடு ஏற்பது குறித்தும் நகராட்சி மற்றும் கடன் வழங்கும் நிறுவனமும் முடிவெடுக்க வேண்டும்.

ஏ.) மேற்காணும் திட்டத்திற்கான மாற்று தீர்மானங்கள் அந்தந்த நகராட்சியால் தேவைப்படும் இனங்களில் நிறைவேற்றப்பட்டு அதனை நகராட்சி நிர்வாக ஆணையர் மாநில அளவிலான திட்ட ஒப்பளிப்புக்குழுவின் முன் வைத்து திருத்திய நிர்வாக அனுமதியினைப் பெற வேண்டும்.

ஐ.) செயலாக்கம் மற்றும் பராமரிப்பு ஆண்டு செலவினம் மற்றும் கட்டுமான காலத்தில் ஏற்படும் வட்டி உயர்வு, ஏனைய விலைவாசி உயர்வு ஆகியவற்றால் ஏற்படும் பற்றாக்குறையினை அந்தந்த நகராட்சிகளே தங்களது பொது நிதியிலிருந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.(Standard condition).

// ஆளுநரின் ஆணைப்படி //

கே.தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை– 600 005.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,
சென்னை–5.
முதன்மை நிர்வாக அலுவலர் (ம) மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உள் கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம், சென்னை–17.
ஆணையர் தேனி மற்றும் நாகப்பட்டினம் நகராட்சிகள் (நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை –108.
மாநில கணக்காயர், சென்னை –5.
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை –18.
நிதித்துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி 2) துறை,சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர். 13/12/07